FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102158

1. District : மயிலாடுதுறை PS: வழுவூர் காவல்நிலையம் மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: 2025 FIR No.: 01/2025 Date: 13.06.2025
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of the Prevention of
   (ii) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: Corruption Act 1988 as
   (iii) Act சட்டம்: by the PC (Amendment) Act Sections பிரிவுகள்: amended by the PC
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 2018. (Amendment) Act 2018.

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 11.06.2025 நாள் வரை 12.06.2025
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் 12.00 hrs நேரம் வரை 12.30 hrs
   (b) Information Received at PS. Date : Time :
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.06.2025 நேரம் 07.00 hrs. / 09.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.06.2025 நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கண்ணியர் நடவடிக்கை அலியட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 கி.மீ வடகிழக்கு.
   Beat Number : (b) Address : மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி
   முறைக் காவல் எண் முகவரி வட்டாட்சியர் அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. K. அனந்தராமன் (b) Father's/ Husband's Name : திருநீலகண்டன்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு 5/9/1967 நாட்டினம் இந்தியா வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : (g) Address : எண்.132, மேலத்தெரு, கொண்டல்,
   தொழில் ஓய்வுபெற்றவர். முகவரி தாடாளன்கோயில் தெற்கு தெரு, மயிலாடுதுறை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. ஜெயசீ, மண்டல துணை வட்டாட்சியர், சீர்காழி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   ஏதுமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்பிக்கப்படுகிறது:

இன்று 13.06.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது K.அலெக்சாண்டர், த/பெ.குஞ்சிதபாதம், 7/32, மேலத்தெரு, கோவில்பத்து, தாடாளன்கோவில், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு: அனுப்புதல், K.அலெக்சாண்டர், த/பெ.குஞ்சிதபாதம், 7/32, மேலத்தெரு, கோவில்பத்து, தாடாளன் கோவில், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம். பெறுதல், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை மாவட்டம். அய்யா, நான் தாடாளன்கோயில், கோவில்பத்து கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். என் மனைவி 2010 இல் இறந்துவிட்டார். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். நான் 11 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கோவில்களுக்கு பெயிண்ட் அடிப்பது மற்றும் சுவர்களில் விளம்பரங்களை எழுதும் வேலை செய்து வருகிறேன். நாங்கள் பல ஆண்டுகளாக குடியிருந்துவந்த சீர்காழி, 52, தாடாளன்கோவில் கிரம புல எண் 94/2 க்கு உட்பட்ட 650 ச.மீ பரப்பளவு கொண்ட நத்தம் மனைக்கு, கடந்த 1972 ஆம் வருடம் எனது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

13/6/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/06/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.06.2025

Name: பெயர் M. அசோக்குமார்

Rank: நிலை சார்பு ஆய்வாளர் No. எண்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை

Scanned with CamScanner

மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் **01/2025** வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

தந்தை குஞ்சி என்கிற குஞ்சிதபாதம் அவர்களின் பேரில் நில ஒப்படைப்பு செய்யப்பட்டு, அதற்கு தமிழக அரசு பட்டா கொடுத்தது. எனது தந்தை கடந்த 2011 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அதன் பிறகு கடந்த 2014 ஆம் ஆண்டு எனது அம்மா ஜெயலெட்சுமி அவர்கள் பெயருக்கு மேற்படி இடம் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. அதன்படி பட்டா எண் 23 இன் படி எனது அம்மா ஜெயலெட்சுமி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு நகர நிலவரிதிட்ட சீர்காழி வட்டாட்சியர் அவர்களால் கடந்த 2014 இல் பட்டா வழங்கப்பட்டது. மேற்படி மனையில் உள்ள வீட்டில் எனது அம்மாவுடன் நானும் எனது தம்பிகளும் வசித்துவருகிறோம். மேற்படி வீட்டில் மராமத்து வேலைகள் பார்க்கவேண்டி தனியார் வங்கியில் லோன் வாங்கலாம் என்று நாங்கள் குடியிருந்து வரும் மனையின் பட்டாவை வைத்து லோன் கேட்டபோது, ஆன்லைனில் என் அப்பா பெயரில் பட்டா இருப்பதாகவும், ஆன்லைனில் உங்க அம்மா பெயருக்கு இன்னும் மாறவில்லை என்றும் உங்கள் அப்பா பெயரிலேயே பட்டா உள்ளது. எனவே பட்டாவை ஆன்லைனில் மாற்றி கொண்டுவாருங்கள் என்று கூறிவிட்டார்கள். நான் தாடாளன்கோவில் வி.ஏ.ஓ விடம் சென்று, என் அம்மா பெயரில் உள்ள பட்டா இன்னும் ஆன்லைனில் மாறாமல் உள்ளது என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு வி.ஏ.ஓ அவர்கள் நீங்கள் சீர்காழி நகராட்சிக்கு சென்று மாற்றிக்கொண்டு வாருங்கள் என்று கூறினார். நான் 26.05.2025 ஆம் தேதி நகராட்சி அலுவலகம் சென்று சர்வேயர் ரஞ்சனி அவர்களை பார்த்து என் அம்மா பெயரில் உள்ள பட்டாவை ஆன்லைனில் ஏற்றவேண்டும் என்று கூறினேன். அதற்கு ரஞ்சனி அவர்கள் இ-சேவை மையத்தில் நீங்கள் பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்துவிட்டு, சீர்காழி தாசில்தார் அலுவலகம் சென்று பாருங்கள் என்று கூறிவிட்டு, எங்கள் மனையின் நான்கெல்லை சான்று எழுதி கொடுத்தார். நான் சர்வேயர் ரஞ்சனி அவர்கள் கூறியது போல் 04.06.2025 ஆம் தேதி சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் என் அப்பா பெயரில் உள்ள ஆன்லைன் பட்டாவை மாற்றி என் அம்மா பெயரில் பட்டாவை ஆன்லைனில் ஏற்ற விண்ணப்பித்தேன். அதன் பிறகு நான் 11.06.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12 மணியளவில் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்களை சென்று சந்தித்து எனது அம்மா பெயரில் ஆன்லைன் பட்டா மாறுதல் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் டெல்பியை போய் பாருங்கள் என்று சொன்னார். அதன்பேரில் நான் அதே அலுவலகத்தில் இருந்த கம்பியூட்டர் ஆப்பரேட்டர் டெல்பியை போய் பார்த்தேன். அப்போது டெல்பி என்னிடம் 15,000/- பணம் கொடுங்கள் என்று கூறியவரிடம் நான் அவ்வளவு பணம் இல்லை என்று கூறி, பணத்தை குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன் அதற்கு டெல்பி அவர்கள் மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்களிடம் சென்று கேட்டுவிட்டு, என்னிடம் வந்தவர், சரி நீங்கள்

10,000/- பணம் மண்டல துணை வட்டாட்சியரிடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். நான் டெல்பி அவர்களிடம் நான் மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்களை நேரில் பார்த்து பணத்தை இன்னும் குறைத்துகொள்ள கேட்கிறேன் என்று கூறினேன். அதற்கு டெல்பி மேடத்தின் அருகில் ஆட்கள் இருக்கிறார்கள் நீங்கள் போங்கள் என்று என்னை அனுப்பிவிட்டார். அதன் பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு நான் 12.06.2025 அன்று மதியம் 12 1/2 மணியளவில் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்களிடம் சென்று அம்மா, என்னுடைய அம்மா ஜெயலெட்சுமி பெயரில் உள்ள பட்டாவை ஆன்லைனில் ஏற்ற வேண்டும் அதற்காக ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளேன் என்றேன், அதற்கு அவர் டெல்பியிடம் நேற்றே பணம் எவ்வளவு வேண்டும் என்று சொன்னேனே என்றார். அதற்கு நான் எனது அம்மாவின் பெயரை ஆன்லைனில் ஏற்ற ரூபாய் 10,000/- பணம் உங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று டெல்பி சொல்கிறார் என்றும் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் சொன்னேன். அதற்கு மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்கள் கண்டிப்பாக ரூபாய் 10,000/- பணம் தரவேண்டும் என்றும், யாரும் செய்யாத வேலையை நான் செய்து தருகின்றேன் என்றும், நீங்கள் அலைந்து வாங்கவேண்டும் நானே மெனக்கெட்டு ஆன்லைனில் பட்டா வாங்கிதருகிறேன். அதனால் ரூபாய் 10,000/- ஐ கொடுத்துவிடுங்கள். நான் ஆன்லைனில் பட்டாவை ஏற்றிவிடுகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும், ரெடிபண்ணி கொண்டுவருகிறேன் என்றும் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனது அம்மா ஜெயலெட்சுமி பெயரில் உள்ள பட்டாவை ஆன்லைனில் ஏற்றிவிடுவதற்கு மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்கள் கேட்ட ரூபாய் 10,000/- லஞ்சப்பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூபாய் 10,000/- பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு அவர் மீது இந்த புகாரினை கொடுக்கிறேன். என்னிடம் லஞ்சமாக ரூபாய் 10,000/- பணம் கேட்ட சீர்காழி மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.தேவகி அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இத்துடன் 1) எனது தந்தை திரு.குஞ்சிதபாதம் த/பெ.நாராயணன் அவர்கள் பெயரில் அரசு வழங்கிய நிலஒப்படைப்பு பட்டா நகல் 2) எனது அம்மா திருமதி.ஜெயலெட்சுமி க/பெ.குஞ்சிதபாதம் அவர்கள் பெயரில் உள்ள பட்டா நகல், 3)எனது அம்மா திருமதி.ஜெயலெட்சுமி க/பெ.குஞ்சிதபாதம் அவர்கள் பெயரில் உள்ள பட்டாவை ஆன்லைனில் மாற்றம் செய்ய இ-சேவை மையத்தில் விண்ணப்பித்த விண்ணப்பம் நகல் 4)சீர்காழி சர்வேயர் ரஞ்சனி அவர்கள் எழுதி கொடுத்த நான்கெல்லை சான்று நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு K.Alexander.(ஆங்கிலத்தில் ஒப்பம்) இடம்: தாடாளன்கோயில், தேதி: 13.06.2025. **SUBMITTED Hon'ble Sir,** Received this computer typed written complaint from the complainant on 13.06.2025 at

07.00 hrs. and verified and ascertained the genuineness of the complaint and verified the antecedents of the accused officer through sources and I registered a case on the complaint on 13.06.2025 at 09.00 hrs. in Mayiladuthurai Vigilance and Anti Corruption Cr.No.01/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.

(M.ARULPRIYA)
Inspector of Police, 13/06/2025
Vigilance and Anti - Corruption,
Mayiladuthurai.

I am submitting the original F.I.R, along with the complaint with annexure to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/ Special Judge, Mayiladuthurai and the copies of the FIR to all other concerned officials.

(M.ARUPRIYA)
Inspector of Police, 13/06/2025
Vigilance and Anti Corruption,
Mayiladuthurai.